

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் ஒன்றியத்தில் 26.08.2025 செவ்வாய்க்கிழமை அன்று பூட்டை மாரியம்மன் கோவில் அருகில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில், வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் கலந்துகொண்டு தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்து, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று, மனுதாரர்களுடன் கலந்துரையாடி விவரங்களை கேட்டறிந்து, பெறப்பட்ட மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, உடனடியாக தீர்வு காணப்பட்ட மனுக்களின் அடிப்படையில் பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, திராவிட மாடல் அரசின் பல்வேறு சாதனை திட்டங்களையும் மக்களிடத்தில் எடுத்துரைத்தார்,இம்முகாமில்,ஒன்றிய குழு பெருந்தலைவர் திலகவதி நாகராஜன், அட்மா குழு தலைவரும், முன்னாள் மாவட்ட ஆவின் சேர்மனுமான ந.ஆறுமுகம், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆறு.கதிரவன், இரா.செல்வம், ந.பன்னீர்செல்வம், பேரூர் கழக செயலாளர் என். துரைதாகப்பிள்ளை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இ.கம்ரூதீன் மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அதிகாரிகள், அலுவலர்கள், தன்னார்வலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், மனுதாரர்கள், பயனாளிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### ஒன்றியப் பெருந்தலைவர் தயாளன் தலைமை!

# மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திண்டிவனம், ஆக. 28 - மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல் படுத்த ப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கடந்த மாதம் 15 ஆம் தேதிசிதம்பரத்தில் தொடங்கி வைத்தார் இதை அடுத்து விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார்.ஒன்றிய துணை சேர்மன் பழனி முன்னிலை வகித்தார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் சிலம்பு செல்வன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான்கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமைதொடங்கி வைத்துபொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்

அப்போது பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் விவரம் குறித்துதுறை சார்ந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ முகாமில் மக்கள் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களையும், மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும், ரத்த அழுத்தம், சர்க்கரை, நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரை அடங்கிய பெட்டகத்தினையும் அவர் வழங்கினார்.

'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை, முதியோர் ஓய்வூதியம் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் பயன்பெறுவதற்கு மனு அளித்தனர்.

நிகழ்ச்சியில் மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், ஒன்றிய கவுன்சிலர்கள் திருநாவுக்கரசு,வேலாயுதம்,மகாலட்சுமி காளிதாஸ் நாக ஜோதி கணேஷ், ஊராட்சி மன்ற தலைவர் ராஜாராம், துணைத் தலைவர்கள் ஜனார்த்தனன், லட்சுமி காந்தன்,மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் திருமலை, ஒன்றிய கிளைக் கழக செயலாளர்கள் அருள்குமரன், ஜெயச்சந்திரன், மேஸ்திரி ஏழுமலை, முத்துகுமரன், முருகானந்தம், ஒன்றிய நிர்வாகிகள் ரவிக்குமார், ஆதிகேசவன், மீனாகுமாரி, தேவதாஸ், வடிவேல் ஊராட்சி நிர்வாகிவேலு, ஒன்றிய அணி நிர்வாகிகள் கலைமணி, கோகுல்,உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் ஆகியோர் விழுப்புரம், மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை 2025 கால்பந்து போட்டியை துவக்கி வைத்தனர். மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆழிவாசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

### ஆ.ராசா எம்.பி - வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - மேயர் ந.தினேஷ்குமார் வாழ்த்துரை!

# தி.மு.க. பொறியாளர் அணி மாநில - மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம்! திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

### எஸ்.கே.பி.கருணா தலைமை! துரை கி.சரவணன் முன்னிலை! எஸ்.ஏ.நந்தகுமார் வரவேற்புரை!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம் வருகின்ற (31.08.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, கோவை அன்னூர், கோவை டு சித்தி என்.எச்.ரோடு, சாமுத்திரிகா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கழக பொறியாளர் அணி மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா தலைமை வகிக்கிறார்.

கழக பொறியாளர் அணி மாநிலத் தலைவர் துரை கி.சரவணன் முன்னிலை வகிக்கிறார்.

கழக பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் அம்பாள் எஸ்.ஏ.நந்தகுமார் வரவேற்புரை ஆற்றுகிறார்.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மேயர் ந.தினேஷ் குமார் ஆகியோர் வாழ்த்துரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் கழக பொறியாளர் அணி மாநில இணை மற்றும் துணைச் செயலாளர்கள் அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., கு.சண்முகசுந்தரம், வே.உமாகாந்த், இரா.நரேந்திரன், சி.பிரதீப், இரா.ப.பரமேசுகுமார், ஆர்.வி.எல்.ரவிச்சந்திரன், கலை கார்த்திகேயன், வெற்றி ஞானசேகரன், பி.அன்பழகன், எம்.பி.ராஜவர்மன் ஆகியோர் அனைவரையும் வரவேற்று மகிழ்கின்றனர்.

கோவை மாநகர மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு நன்றி உரை ஆற்றுகிறார்.






விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருக்கோவிலூர் நகரத்தில் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் அண்ணா அறிவகம் ( DISTRICT FIREWALL) திறப்பு விழா விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன் கலந்து கொண்டு திறந்து வைத்தார். ம.ஜெயச்சந்திரன், டி.என்.முருகன், ஆர்.கற்பகம், சுவை.சுரேஷ், எம்.கே.சிவா, எம்.தேன்மொழி, மு.தங்கம், டி.செல்வராஜ், அப்துல் சலாம், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், கல்பட்டு வி.இராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# அன்பில் பொய்யாமொழி

### ஆகஸ்ட் 28 (1999)



**திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வர்.**

**தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவர்.**

**1989–91 மற்றும் 1996–99ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# வேளச்சேரியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

சென்னை, ஆக.28–

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (26.08.2025) சென்னை, வேளச்சேரி, 100 அடி சாலையில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடித் தீர்வுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் முகாம் தமிழ்நாட்டில் முதல மைச்சர் அவர்கள் தினந்தோறும் ஒவ்வொரு புதிய திட்டத்தை அறிமுகப் படுத்தி தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் அடிப்படைத் தேவைகளையும், வாழ்வாதார தேவைகளையும் உடனடியாக நிறைவேற்றி வருகிறார்கள். ஏராள மான திட்டங்கள் தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் மிகச் சிறந்த திட்டங்களில் ஒன்றான "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்நாட்டின் ஊரகப்பகுதிகளில் 6232 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. ஊரகப்பகுதிகளில் 46 வகையான சேவைகள், 15 துறைகளின் வாயிலாக நடத்தப்படவிருக்கிறது.

அதேபோல் நகர்ப்புறப் பகுதிகளைப் பொறுத்தவரை 3768 முகாம்கள் 43 வகையான சேவைகள் 13 துறைகளின் வாயிலாக வழங்க இருக்கிறது. அந்தவகையில் இந்த முகாம்களை பொறுத்தவரை கடந்த ஜூலை திங்கள் 15ஆம் தேதி பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளில் சிதம்பரம் நகராட்சியில் முதலமைச்சர் அவர்கள் இந்த சீரிய திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

இந்த திட்டம் ஜூலை 15 முதல் ஆகஸ்ட் 14 வரை 3561 முகாம்கள் நடத்தப்படும் என்றும், ஆகஸ்ட் 15 முதல் செப்டம்பர் 14 வரை 2859 முகாம்களும், செப்டம்பர் 15 தொடங்கி அக்டோபர் 14 வரை 2773 முகாம்களும், அக்டோபர் 15 முதல் நவம்பர் 14 வரை 807 முகாம்கள் என ஆக மொத்தம் 10,000 முகாம்கள் வரை நடத்தப்படவிருக்கிறது.

இதுவரை தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ள முகாம்களின் எண்ணிக்கை 4,419 ஆகும். ஏறத்தாழ 45% முகாம்கள் நடைபெற்றுள்ளது. இதுவரை நடைபெற்றுள்ள முகாம்களில் 36,49,399 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கு உடனடி தீர்வும், தீர்வு காண முடியாத மனுக்களுக்கு விளக்கமும் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.


அந்தவகையில் இன்று பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை முதற்கட்டமாக 109 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டு, 109 முகாம்க ளும் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்ட முகாம்கள் என்கின்ற வகையில் 19.08.2025 முதல் 14.09.2025 வரை 148 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில் சென்னையில் மட்டுமே நடத்தப்பட்டு இருக்கின்ற முகாம்களின் எண்ணிக்கை 152. இந்த முகாம்களில் சென்னையில் மட்டுமே பெறப்பட்டிருக்கின்ற மனுக்களின் எண்ணிக்கை 3,40,689. பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்தோடு அவரவர் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்ற வகையில் இந்த முகாம்களுக்கு வருகிறார்கள். இந்த முகாம்கள் நடைபெறுகின்ற அனைத்து இடங்களிலும் மாற்றுத்திறனாளிகள் எளி தாக பயன்பெறும் வகையில் தன்னார்வலர்களும், மூன்று சக்கர வாகனங்களும் தயார்நிலையில் இருந்துக் கொண்டிருக்கிறது என்று கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே.டி.எஸ். மணி

### ஆகஸ்ட் 28 (1993)



**செங்கல்பட்டு மாவட்டத்தின் தி.மு.க. முன்னோடிகளில் ஒருவர். தி.மு.க. நடத்திய பல போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவர்.**

**செங்கல்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகவும் காஞ்சிபுரம் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**